14.10.2016

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### விற்பனைக்கு வந்த 'மெகா' சீத்தா பழம்

குன்னுார் : குன்னுாரில் விளைந்த 'மெகா சைஸ்' சீத்தா பழம் சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகிறது.

குன்னுார் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தற்போது சீத்தா பழங்களின் சீசன் களை கட்டி வருகிறது. இந்நிலையில், குன்னுார் அட்டடியில் விளைந்த சீத்தா பழங்கள், சிம்ஸ்பூங்கா பகுதியில் கடைக்கு விற்பனைக்கு கொண்வரப்பட்டன. இதில், 'மெகா சைஸ்' பழம் ஒன்று, 2.6 கிலோ இருந்தது. இந்த பழத்தை சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் பார்த்து செல்கின்றனர்.

தற்போது, சீத்தா பழம் கிலோ, 100 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வியாபாரி சுகுமாரன் கூறுகையில்,"ஆண்டுதோறும் சீத்தா பழம் சீசன் சமயத்தில் வருகின்றன. முன்பெல்லாம் இதுபோன்ற மெகா சைஸ் பழங்கள் அதிகளவில் வந்தன. தற்போது இவை குறைந்துவிட்டது. ஒரு சில இடங்களில் மட்டுமே ஒன்றோ, இரண்டோ இதுபோன்று கிடைக்கிறது," என்றார்.

### எட்டி பார்த்த மழையால் ஆறுதல்

கோத்தகிரி : கோத்தகிரியில் நீண்ட நாட்களுக்கு பிறகு, மழை பெய்ததால், விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர்.

நீலகிரியில் நடப்பாண்டு பருவமழை பொய்த்துவிட்டது. இதனால், தண்ணீர் இன்றி, தோட்டங்களையும், குடும்பங்களையும் பராமரிக்க முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல இடங்களிலும், மழைவேண்டி பிரார்த்தனை செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், நீண்ட இடைவெளிக்கு பிறகு,

கோத்தகிரியில், நேற்று அரை மணிநேரம் மழை பெய்தது. இதனால், விவசாயிகள் உட்பட பொதுமக்கள் ஆறுதல் அடைந்தனர்.

### செம்மண் நிலத்திலும் காலிபிளவர்

திண்டுக்கல், திண்டுக்கல் பகுதியில் செம்மண் விளை நிலத்தில் 60 நாட்களில் விளையும் காலி பிளவர் பூக்கள் விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டுக்கல் - பழநி ரோட்டில் வெயிலடிச்சான்பட்டி விவசாயி முருகன், 32. இவர் தனது தோட்டத்தில் காலி பிளவர் பயிரிட்டுள்ளார். பொதுவாக வண்டல்மண் மற்றும் நிழற்பாங்கான, நீர்ப்பிடிப்பு பகுதிகளில் காலிபிளவர் நன்கு வளரும். செம்மண்ணில் காலிபிளவர்: ஆனால் விவசாயி முருகன் மற்றும் அவரது குடும்பத்தினர் செம்மண் நிலத்தை நன்கு உழுது மண்ணை பண்படுத்தி, செம்மண்ணோடு, கரிசல் மண், தொழு உரம் உள்ளிட்டவை சேர்ந்து நாற்றங்கால் பண்ணையில் நாற்றுக்கள் வாங்கி நட்டனர்.

மொத்தமுள்ள 32 சென்ட் நிலத்தில் 3 ஆயிரத்து 500 காலிபிளவர் நாற்றுக்களை நட்டு, விதைப்புக்கூலி, பராமரிப்பு, பூச்சித் தாக்குதல் என மகசூலுக்கான விளைச்சல் வரை ரூ.20 ஆயிரம் செலவிட்டுள்ளனர். அறுபது நாட்கள் அறுவடையில் விதைப்பு, எடுப்புக்கூலி போக ரூ.7 ஆயிரம் லாபமாக கிடைத்துள்ளது.

ஏழாயிரம் லாபம்: விவசாயி முருகன் கூறியதாவது: என் சகோதரியின் வீடு கொடைக்கானல் மலையின் அடிவாரத்தில் உள்ளது. அங்கு காலிபிளவர் அதிகளவில் வளரும். அதேபோல் இங்கு பயிரிட எண்ணி விதைத்தோம். 60 நாட்கள் காய்ப்பில் பூக்கள் நன்றாக வந்துள்ளது. கிணற்றுப் பாசனம் என்பதால் பராமரிப்பு எளிதாக முடிந்தது. தற்போது பூக்கள் கிலோ ரூ.25 முதல் ரூ.30 வரை விற்பனையாகிறது. ரூ.20 ஆயிரம் முதலீடு செய்தோம். ரூ.7 ஆயிரம் லாபம் கிடைத்துள்ளது. இது கால நிலைக்கு தகுந்தமாதிரி மாறுபடும், என்றார்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் மழை

தாண்டிக்குடி, கொடைக்கானல், தாண்டிக்குடி மலைப்பகுதியில் நேற்று மாலை 2 மணி நேரம் கனமழை கொட்டியதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். பருவமழைக்கு பின் மலைப்பகுதியில் வறண்ட வானிலை நீடித்து குடிநீர், விவசாயிகள் பாசனத்திற்கு தண்ணீரின்றி தவித்தனர். மலைப்பகுதியில் காபி, மிளகு, அவகடா, ஏலம், மலைவாழை சாகுபடி பாதித்தது. குறுவிவசாயமும் தண்ணீர் பாசனமின்றி மகசூல் பாதித்தது. வெயிலின் தாக்கம் அதிகரித்த நிலையில் விவசாயிகள் விரக்தியடைந்தனர்.

இந்நிலையில் நேற்று மாலை 4 மணிக்கு இடி, மின்னலுடன் கனமழை பெய்யத் துவங்கியது. இரண்டு மணி நேரம் வெளுத்து வாங்கியது. கொடைக்கானல், பண்ணைக்காடு, தாண்டிக்குடி, தடியன்குடிசை உட்பட பரவலாக கனமழை நீடித்தது.
பழநியில் மழை: பழநி பகுதியில் மதியம் 2 மணிக்குமேல் பழநி நகர், வரதமாநதி அணை, பாலசமுத்திரம், நெய்க்காரப்பட்டி மற்றும் பழநி நகரில் மழை பெய்தது. சவரிக்காடு, மேல்பள்ளம் உட்பட மலை அடிவாரப் பகுதிகளில் மழை பெய்தது. ஆத்துார், செம்பட்டி, கொடைரோடு, அம்மையநாயக்கனுார், காமலாபுரம், சின்னாளபட்டி பகுதிகளில் வெப்பத்தால் மக்கள் அவதிப்பட்டனர். இந்நிலையில் மூன்று நாட்களாக செம்பட்டி பகுதியில் மேகமூட்டம் காணப்பட்டது. நேற்று கசவனம்பட்டி, செம்பட்டி, ஆத்துார், அக்கரைப்பட்டி, எஸ்.பாறைப்பட்டி, வண்ணம்பட்டி, செம்பட்டி பகுதிகளில் மழை பெய்தது. இதனால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வத்தலக்குண்டு, நிலக்கோட்டை பகுதிகளிலும் மழை பெய்தது.

## கொடைக்கானலில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

கொடைக்கானல், - கொடைக்கானலில் பெய்த மழையால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கொடைக்கானலில் கடந்த சில மாதங்களாக வறட்சியான சீதோஷ்ணநிலை நிலவியது. அவ்வப்போது சாரல் பெய்து குளிர்வித்தது. மழையின்றி கொடைக்கானல் ஏரி, பேரிஜம் ஏரி, ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட குடிநீர்த்தேக்கம், மனோரஞ்சிதம் அணைகளின் நீர்மட்டம் குறைந்து வந்தன. நகரில் குடிநீர் தட்டுப்பாடு நிலவும் அபாய நிலை ஏற்பட்டது. நேற்று காலை முதலே வானம் இருண்டு கருமேகங்கள் சூழ்ந்தன. காலை 11:30 மணியளவில் துவங்கிய மழை சிறிது இடைவெளி விட்டு பின்னர் தொடர்ந்து பலத்த மழையாக மாறியது.

வறட்சியான சூழலில் வசித்த பொதுமக்கள் நீண்ட நாட்களுக்கு பின்னர் பெய்த மழையால் உற்சாகம்அடைந்தனர். இம்மாதிரி மழை தொடர்ந்தால் குடிநீர் தட்டுப்பாடு நீங்கும் என, தெரிவித்தனர்.

விவசாயிகள் கூறுகையில், 'இம்மழை விவசாயத்திற்கு பேருதவியாக இருக்கும்' என்றனர். மாலை நேரத்தில் பலத்த மழை பெய்ததால் வாகனங்கள் முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டுச் சென்றன.

மழையால் மாறிய சீதோஷ்ண நிலையால் சுற்றுலாபயணிகள் நடுங்கியபடி சென்றனர். குளிர் தாங்க முடியாதவர்கள் அறைக்குள் முடங்கினர். 'கடந்த சில மாதங்களாக பொதுமக்களுக்கு அலர்ஜியை ஏற்படுத்திய வெள்ளை பூச்சி, இந்த மழையால் குறையும்' என, தோட்டக்கலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## காபி விவசாயிகளேகொஞ்சம் கவனியுங்க...

தாண்டிக்குடி, மத்திய அரசின் காபி வாரியம் ஆண்டுதோறும் விதைக் காபி உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குகிறது. நடப்பாண்டில் விதைக் காபி முன்பதிவு செப்., 20ல் துவங்கி அக்., 31வரை நடக்கிறது. முன்பதிவுக்கு முன் பணமாக கிலோவுக்கு ரூ.500 செலுத்த வேண்டும். மேலும் விவரங்களுக்கு வத்தலக்குண்டு, பண்ணைக்காடு, பெருமாள்மலை, ஆடலூர் மற்றும் சிறுமலை காபிவாரிய அலுவலகங்களில் தொடர்பு கொண்டு பெறலாம். இத்தகவலை வத்தலக்குண்டு காபி வாரிய முதுநிலை தொடர்பு அலுவலகம் அறிவித்துள்ளது.

## கனமழை பெய்ததால்... தியாகதுருகம் நீர்நிலைகளில் நீர்மட்டம் உயர்வு

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதியில் இரு தினங்களாக பெய்த கனமழை யால், நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து கிடைத்துள்ளது.
தியாகதுருகம் சுற்றுவட்டார பகுதியில் கடந்த இரு தினங்களாக இரவில் இடி மின்னலுடன் கனமழை கொட்டியது. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் பள்ளமான பகுதியில் தண் ணீர் தேங்கியது.

ஏரி, குளங்களின் வரத்து வாய்க்கால் மூலம் நீர் கிடைத்து தண்ணீர் அளவு உயர்ந்துள்ளது. விளைநிலங்களில் தண்ணீர் தேங்கி குளம் போல் காட்சியளிக்கிறது.

இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதால், கிணற்று நீர் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த சில மாதங்களாக பருவமழை போக்கு காட்டிவந்த நிலையில் தற்போைதய மழை அனைத்து தரப்பினருக்கும் ஆறுதலாக உள்ளது.
தொடர்ந்து மழை பெய்யும்பட்சத்தில் தென்மேற்கு பருவமழை துவங்குவதற்கு முன்பே, நீர்நிலைகளில் தண்ணீர் அளவு அதிகரித்து விவசாயம் செழிக்க வாய்ப்புள்ளது.
மழை பெய்து மண்ணின் ஈரத்தன்மை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் பலர் நெல் நடவு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மானவாரி பயிர்களுக்கும் நல்ல ஊட்டத்தை அளித்துள்ளதால் உரங்களை துாவி பராமரிக்கும் வேலைகளை துவக்கியுள்ளனர்.

## வடகிமக்கு பருவமழையை எதிர்பார்த்து மானாவாரி நிலங்களில் பணிகள் துவக்கம்

கரூர்: நடப்பாண்டு, வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து, கரூர் மாவட்டத்தில் மானாவாரி நிலங்களில், விவசாய பணிகள் துவங்கியுள்ளன.

கரூர் மாவட்டத்தில், ஜனவரி முதல் டிசம்பர் வரை ஆண்டு சராசரியாக, 652.20 மி.மீ., மழை பெய்ய வேண்டும். கடந்தாண்டு, வடகிழக்கு பருவமழை மற்றும் தென்மேற்கு பருவ மழை எதிர் பார்த்த அளவில் பெய்யவில்லை. இந்தாண்டும் தென்மேற்கு பருவ மழை சரியான முறையில் பெய்யவில்லை. சேலம் மாவட்டம், மேட்டூர் அணை மற்றும் திருப்பூர் மாவட்டம் அமராவதி ஆற்றில் இருந்து பாசனம் மற்றும் குடிநீருக்காக தண்ணீர் திறக்கப்பட்டதால், காவிரி மற்றும் அமராவதி

ஆற்றில் தண்ணீர் வந்தது. இந்நிலையில், கரூர் மாவட்ட விவசாயிகள் வடகிழக்கு பருவமழையை எதிர் பார்த்து காத்துள்ளனர். கரூர் மாவட்டம் முழுவதும் கடந்த சில நாட்களாக கோடையை போன்று வெயில் அடித்தது.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக, ஆங்காங்கே மழை பெய்ய துவங்கியுள்ளது. மேலும், வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து, கரூர் மாவட்டத்தில் மானாவாரி விவசாய நிலங்களில் சாகுபடி பணிகள் துவங்கியுள்ளன. குறிப்பாக, அரவக்குறிச்சி சுற்று வட்டார பகுதியில் முருங்கை சாகுபடி விறுவிறுப்பாக துவங்கியுள்ளது. இதை தவிர, எண்ணை வித்து பயிர்கள் சாகுபடி பணிகளிலும் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, கரூர் மாவட்ட விவசாயிகள், வடகிழக்கு பருவ மழை காலத்தில் அதிக மழை பெய்ய வேண்டும்' என வருண பகவானின் கருணையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

**பசு மாடு வளர்ப்பு குறித்த பயிற்சி**

கிருஷ்ணராயபுரம்: லாலாப்பேட்டை அடுத்துள்ள, மகாதானபுரத்தில் வேளாண்மை கல்லூரி மாணவியருக்கு, உயர்ரக பசு மாடுகள் வளர்ப்பு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. கிருஷ்ணராயபுரம் தாலுகா பகுதியில், மகாதானபுரத்தில் திருச்சி அன்பில் தர்மலிங்க வேளாண் கல்லூரி மாணவியர், விவசாயிகள் சம்பந்தபட்ட கள பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, மகாதானபுரம், மேட்டுமகாதானபுரம் பகுதியில் உள்ள விவசாயி சவுந்தர்ராஜன் தோட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த பண்ணை அமைப்பதன் மூலம், உயர் ரக பசு மாடுகள் வளர்ப்பதால் பால் உற்பத்தி, நிலங்களுக்கு வேண்டிய தொழு உரம், பஞ்சகாவியம் போன்றவை கிடைக்கிறது. மேலும் மாடுகளுக்கு தேவையான உயர்ரக புல் வகைகள் பயிர் சாகுபடி செய்து அதை, பசு தீவனமாக கொடுக்கலாம் என, மாணவியருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. மகாதானபுரம் உழவர் மன்ற தலைவர் ஜெயபால் பங்கேற்றார்.

## மாவட்டத்தில் கனமழை: மங்களபுரத்தில் 24 மி.மீ., பதிவு

நாமக்கல்: மாவட்டம் முழுவதும், பல்வேறு இடங்களில், நேற்று முன்தினம் இரவு, 77.02 மி.மீ., மழை பெய்துள்ளது. நாமக்கல் மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி வதைக்கிறது. பொதுமக்கள் பலரும், வெளியே தலைகாட்ட முடியாமல், வீட்டுக்குள் பதுங்கி இருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், பரவலாக, கனமழையும், லேசான மழையும் பெய்தது. இரவு மழை பெய்ததால், குளிர்ந்த காற்று வீசியது. அதனால், விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். மாவட்டம் முழுவதும், நேற்று காலை, 8:00 மணி நிலவரப்படி, 77.02 மி.மீ., மழையவு பெய்துள்ளது. அதில், அதிகபட்சமாக, மங்களபுரத்தில், 24 மி.மீ., மழை அளவு பதிவாகி உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு: நாமக்கல், 3, ப.வேலூர், 2, ராசிபுரம், 11.02, சேந்தமங்கலம், 18, திருச்செங்கோடு, 15, எருமப்பட்டி, 2, மங்களபுரம், 24, புதுச்சத்திரம், 2 என, மொத்தம், 77.02 மி.மீ., மழை பெய்துள்ளது. சராசரியாக, 7.70 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

## ரூ.22 ஆயிரத்திற்கு நெல் பயிர் காப்பீடு

திருப்புத்தூர், திருப்புத்தூர் வேளாண்மை உதவி இயக்குனர் கதிரேசன் கூறியதாவது: திருப்புத்தூர் பகுதியில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் நெல், கரும்பு, உளுந்து நிலக்கடலை, பருத்தி, வாழை, மிளகாய் பயிர்களுக்கு இன்சூரன்ஸ் செய்யப்படுகின்றன. நெல் பயிருக்கு அதிகபட்ச காப்பீட்டுத் தொகையாக 22 ஆயிரம் ரூபாய் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இழப்பீடு வருவாய் கிராம அடிப்படையில் கணக்கிடப்பட உள்ளது. மேலும் நெல் விதைப்பு செய்யும் பகுதியில் போதிய மழையின்றி விதைக்க தவறினாலோ அல்லது விதைக்கப்பட்ட பயிர் முளைத்த பின் கருகினாலோ 25 சதவீதம் வரை இழப்பீடு பெற முடியும்.

மேலும் அறுவடைக்கு பின் விளைச்சலில் இயற்கை சீற்றங்களால் பாதிப்பு ஏற்பட்டாலும் இழப்பீடு பெற வாய்ப்புள்ளது. மத்திய, மாநில அரசுகள்

பங்குத்தொகை போக, விவசாயிகள் நெல்லுக்கு ஒரு ஏக்கருக்கு 330 ரூபாய் செலுத்தினால் போதும்.

பயிர் கடன் பெறும் விவசாயிகளுக்கு வங்கிகளே கடன் தொகையில் இருந்து பிரிமீயத்தை பிடித்தம் செய்து கொள்ளும். பயிர் கடன் பெறாத விவசாயிகள் தாங்கள் சேமிப்பு கணக்கு வைத்துள்ள வங்கிகளில் பிரிமீயம் செலுத்த வேண்டும். இன்சூரன்ஸ் செலுத்த சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை, முகவரி சான்று நகல் ஆகியவற்றுடன் செல்ல வேண்டும். நெல்லுக்கு நவ., 30 க்குள் பிரிமீயம் செலுத்த வேண்டும், என்றார்.

## இரட்டிப்புலாபம் தரும் விதை பண்ணைகள்

சிவகங்கை, 'விதை பண்ணைகள் அமைத்து விவசாயிகள் இரட்டிப்பு லாபம் பெறலாம்,' என சிவகங்கை மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குனர் லட்சுமி பிரபா தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: சிவகங்கை மாவட்ட விவசாயிகள் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்து பயிர் விதைப்பண்ணைகளை அமைத்து இரட்டிப்பு லாபம் பெறலாம். விதை பண்ணை அமைப்பதற்கு தேவையான கரு, ஆதாரநிலை மற்றும் சான்று நிலை விதைகளை அந்தந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் அல்லது உரிமம் பெற்ற விதை வற்பனை நிலையங்களில் வாங்கி கொள்ளலாம்.

விதை வாங்குவதற்கு முன், சான்றட்டையில் காலக்கெடு, தேதியை சரி பார்த்து வாங்க வேண்டும். ரசீது, சான்றட்டையை பக்கிரமாக வைக்கிருக்க வேண்டும். விகை பண்ணையை வட்டார வேளாண்மை உகவி இயக்குனர் மூலம் சிவகங்கை விதைச்சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். விரும்புவோர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனரை அணுகலாம், என்றார்.

## தர்மபுரி மாவட்டத்தில் தொடரும் மழை: அரூரில் அதிகபட்சமாக 34.30 மி.மீ., பதிவு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், நேற்று, இரண்டாவது நாளாக மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக அரூரில், 34.30 மில்லி மீட்டர் பதிவானது.

தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், கடந்த, இரு நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும், மானாவாரி பயிர் சாகுபடி செய்ய நிலங்களை தயார் படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட துவங்கியுள்ளனர். நேற்று மாவட்டத்தில் அதிகபட்சமாக, அரூரில், 34.30 மில்லி மீட்டர் மழை பதிவானது. ஒகேனக்கல்லில், 12.20, பாலக்கோடு, 6, பென்னாகரத்தில், 5, தர்மபுரியில், 2, பாப்பிரெட்டிப்பட்டியில், 1 மி.மீ., மழையளவு பதிவானது. தர்மபுரியில் நேற்று காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மாவட்டத்தின் சில பகுதிகளில் சாரல் மழை பெய்ததால், குளுமையான சீதோஷ்ணநிலை காணப்பட்டது.

## செல்வம் கொழிக்கும் 'கோகோ பீத்'



இயற்கை விவசாய ஆர்வலர் களுக்கு வரப்பிரசாதமாக 'கோகோ பீத்' எனும் தென்னை நார் கழிவு உள்ளது. பராமரிப்பு செலவு குறைவு; லாபம் அதிகம் என்ற அடிப்படையில் பெரும் பாலான விவசாயிகள் கோகோ பீத் விவசாயத்தில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மதுரை வாடிப்பட்டி சர்வோதயா சங்க நிர்வாகி சுந்தரராஜன், 'கோகோ பீத்' தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தென்னை நார் கேக்குகள் தயாரித்து விற்பனை செய்து சாதித்து வருகிறார்.

அவர் கூறியதாவது: தென்னை மட்டையிலிருந்து கிடைக்கும் கழிவு 'கோகோ பீத்' தயாரிப்புக்கு மூலப்பொருள். இக்கழிவை சலித்து பின் தண்ணீர் தெளித்து வெயிலில் உலரவைக்க வேண்டும். உலர்ந்த கழிவுகளை சேகரித்து 'ஹைட்ராலிக்' மெஷின் மூலம் தேவையான வடிவத்தில் கேக்குகளாக தயாரிக்கின்றனர். 14 கிராம் அளவிலிருந்து 5 கிலோ அளவிலான சதுர வடிவ கட்டிகளாக தயாரிக்கின்றனர். இயற்கை விவசாயம் செய்வோருக்கு, 'கோகோ பீத்' வரப்பிரசாதம். விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு இருப்பதால் மார்க்கெட்டிங் செய்வது எளிது. மண் போன்ற பொருட்களை விமானத்தில் கொண்டு செல்ல தடை உள்ளது. தென்னை கழிவில் தயாரிக்கும் கேக்குகளை கொண்டு செல்ல தடை இல்லை. இதனால் உள்நாடு, வெளிநாடுகளுக்கு 'கோகோ பீத்' அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

30 கிராம் அளவில் உள்ள கேக்கில் நீர் ஊற்றினால் அது நீரை உறிஞ்சி தக்க வைத்து கொள்ளும். நீர் உறிஞ்சிய 'கோகோ பீத்'தை எடையிட்டால் 300 கிராம் அளவை காட்டும். இது வீடுகளின் மாடிதோட்டம் நர்சரி கார்டன், நாற்றுகளை உருவாக்க பயன்படும். மண்ணுக்கு பதிலாக 'கோகோ பீத்' மட்டும் போதும். தாவரங்கள் சத்தான முறையில் நன்கு வளரும். இரண்டு ஆண்டுகள் செடிகளை வளர்க்க பயன்படும்.

பின் தானாகவே மக்கி உரமாகிவிடும். அதற்கு பிறகு மகசூலை கணக்கிட்டால் சராசரியாக கிடைத்த மகசூலைவிட ஒரு மடங்கு கூடுதலாக கிடைக்கும். மும்பை சர்வதேச விமான நிலையத்தில் இந்த கேக்குகள் செடிவளர்க்க, புல்தரை அமைக்க அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். மண்ணை பயன்படுத்தி விவசாயம் செய்யும் போது நோய் தாக்குதல் இருக்கும். 'கோகோ பீத்' விவசாயத்தில் நோய் தாக்குதல் குறைவு என்பதால் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். தொழில் நுட்ப ஆலோசனைக்கு 99769 17062 ல் ஹலோ சொல்லலாம்.- **ஆர்.ராஜா, மதுரை.**

## கோமாதாவும் கோமாரி நோயும்



"பத்து பசுக்கள் எம் வீட்டில் உண்டு. நல்ல பாலுக்கு யாதொரு பஞ்சமுமில்லை. நித்தம் சுகமாக வாழ்ந்திடுவோம். இந்த நீணிலத்து எம்மையொப்பாருமுண்டோ?," என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடினார்.
பத்து கறவை பசுக்கள் வீட்டில் இருந்தால் பாலுக்கு பஞ்சமில்லை. தினம் சுகமாக இருந்திடுவோம். அப்புறம் இந்த உலகத்தில் எங்களுக்கு இணையாக யாரும் இருப்பார்களா? என்பதே இதன் அர்த்தம்.

### கறப்பது ஆழாக்கு உதைப்பது பல்லுப்போக

கால்நடை வளர்ப்பில் நம்முடைய பாட்டனார், முப்பாட்டனார் காலத்தில் எந்தவித அக்கறையும் எடுத்து கொண்டதாக அறிய முடியவில்லை. அக்காலத்தில் வளர்க்கப்பட்ட மாடுகள் நாட்டு இன மாடுகளாக இருந்தன. இவை கால்படி பால் கூட நாள் ஒன்றுக்கு கறக்காது. அன்றைய நாட்டு மாடுகளை பற்றி 'கறப்பது ஆழாக்கு, உதைப்பது பல்லுப்போக' என்ற பழமொழி வழங்கி வந்திருக்கிறது. ஆழாக்கு பால் கறந்தாலும் நாட்டு மாடுகளை நாம் குறைவாக மதிப்பிட்டு விட முடியாது. ஒரு விஷயத்தில் அவை மேன்மையானவையே. அது நோய் எதிர்ப்பு சக்தி என்ற தன்மை கொண்டிருந்தது. அக்கால நாட்டு மாடுகள் நோய் வந்தால் பத்து நாட்களுக்கு கூட தாங்கும். தீவனம் சாப்பிடாமல் இருக்கும். 11வது நாள்

தானாக தீவனம் தின்ன ஆரம்பிக்கும். காரணம் நோயை உண்டாக்கக்கூடிய கிருமிகளை எதிர்த்து தாங்கி நிற்கக்கூடிய தன்மை அவற்றில் மேலோங்கி இருந்தது.

## கால்நடை வளர்ப்பு தொழிலானது

கால்நடை வளர்ப்பு தற்போது தொழிலாக மாறி விட்டது. அன்றைய மக்கள் தொகைக்கு ஈடாக நாட்டு இன கால்நடைகளின் பால் உற்பத்தி போதுமானதாக இருந்தது. மக்கள் தொகை பெருக்கத்தால் பால் தேவை அதிகரித்து வருகிறது. மக்களின் தேவை பெருக பெருக, நாட்டு இன பசுக்களின் மூலம் கிடைக்கும் பால் உற்பத்தி பற்றாக் குறையாக இருந்தது.

இதனால் கால்நடை அறிவியல் விஞ்ஞானிகள் இதற்கு தீர்வு காண முற்பட்டனர். அரசும் இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தது. நாட்டு இன மாடுகளை வைத்து, பாலின் தேவையை பூர்த்தி செய்ய முடியாது.

இதற்கு ஈடுகட்டும் நோக்கத்தில் வெளிநாட்டில் இருந்து கறவை பசுக்களை இறக்குமதி செய்து கொள்ளலாம் என ஒரு சாரார் ஆலோசனை தெரிவித்தனர். ஆனால் வெளிநாட்டு கறவை பசுக்களுக்கு நம் நாட்டு தட்ப வெப்ப நிலை ஏற்றுக்கொள்ளாது. குளிர் பிரதேசவாசிகளான அவை வெப்ப பகுதியான நம் நாட்டு தட்ப வெப்ப நிலையில் தாக்குப்பிடிக்காது என்பதால் இந்த யோசனை நிராகரிக்கப்பட்டது.

முடிவாக நாட்டு இன கறவை மாடுகளுக்கு வெளிநாட்டு காளைகளின் விந்தினை, குழாய் மூலம் கருப்பையில் செலுத்தி சினை பிடிக்கச் செய்யலாம். அதற்கு பிறக்கும் 'கிடேரி' கன்றுகள் வளர்ந்து பருவமடையும் போது வெளிநாட்டு இனத்தில் 50 சதவீத குணத்துடன் பாலை கொடுக்கும் என்ற கொள்கை அடிப்படையில் உருவானது தான் இன்றைய செயற்கை கருவூட்டல் முறை.

**கோமாதாவை தாக்கும் 'கோமாரி'**

நோய் எதிர்ப்பு திறன் குறைவாக கொண்ட கால்நடைகள், கோமாரி நோய் தாக்கினால் மிகவும் பாதிப் படைகின்றன. கோமாரி நோயை கிராம வழக்கில் கால்காணை, வாய்க்காணை என்று அழைப்பர். இந்த நோய் பாதிக்கப்பட்ட பசுக்களின் பால் உற்பத்தி மிகக்குறைந்து விடும். சினைப்பிடிக்கும் திறன்,

கணிசமாக குறையும். எருதுகள் தங்கள் வேலை திறனை வெகுவாக இழக்கும். நோய் கண்ட கால்நடைகளிடம் எந்நேரமும் மூச்சிரைப்பு காணப்படும். இந்நோய் வராமல் தடுக்க நோய் வருவதற்கு முன்பே தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் கோமாரி நோயை தடுக்க விவசாயிகள் முனைப்புடன் செயல்படவில்லை எனில், பால் உற்பத்தியில் முன்னேற்றம் காண இயலாது. கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகளில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுகின்றன. ஆண்டு தோறும் மார்ச், செப்டம்பர் மாதம் என ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கோமாரி நோய் தடுப்பூசியை இலவசமாக விவசாயிகளின் கால்நடைகளுக்கு போடப்படுகின்றன. விவசாயிகள் இந்த வாய்ப்பினை தவறாது பயன்படுத்தி கொள்ள வேண்டும். இதனால் பால் உற்பத்தியில் நாடும், வீடும் தன்னிறைவு அடையும். தொடர்புக்கு 94864 69044. - டாக்டர் வி.ராஜேந்திரன் முன்னாள் இணை இயக்குனர் கால்நடை பராமரிப்புத்துறை.

**ஜெர்சி, பிரிசியன் கொடை வள்ளல்கள்**

அயல்நாட்டு இனங்களான ஜெர்சி, பிரிசியன் போன்ற கறவை மாட்டு இனங்கள் பாலை பொழிந்து தருவதில் கொடை வள்ளல் தன்மை கொண்டது. 'வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்' என ஆண்டாள் இதனை நினைத்து தான் பாடினாரோ என்னவோ? நம் நாட்டு இனங்களை ஒப்பிடும் போது பால் உற்பத்தியில் மிக அபரிமிதமான பால் தருபவை இவை. இருப்பினும் நோய் எதிர்ப்பு சக்தி திறனை நாட்டு இனங்களோடு ஒப்பிடுகையில் கலப்பின கறவை பசுக்களுக்கு எதிர்க்கும் திறன் குறைவு. தற்போது கலப்பின கால்நடைகளின் எண்ணிக்கை பெருமளவு பெருகிவிட்டது. நாட்டு இனங்களின் எண்ணிக்கை சொற்பமாக உள்ளது.

**நுண்ணீர் பாசன திட்டம் 100 சதவீத மானியம்**



மத்திய, மாநில அரசு நிதியுடன் நுண்ணீர் பாசனம் மற்றும் தெளிப்பான் இனங்களுக்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்துடனும் முன்னுரிமை அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பிட்ட அளவுள்ள பொருட்களுக்கான செலவில் சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. கூடுதலாக தேவைப்படும் பொருட்கள், போக்குவரத்து செலவினம் மற்றும் சொட்டு நீர்ப்பாசன கருவிகள் பொருத்துவதற்கான செலவு தொகை மட்டும் விவசாயிகளிடம் வசூலிக்கப்படுகிறது.

இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் தங்களது சிட்டா, அடங்கல், ரேஷன் கார்டு நகல், வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல், இரண்டு பாஸ்போர்ட் புகைப்படத்துடன் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

ஆவணங்களுடன் நிலத்தின் வரைபடம், மண், தண்ணீர் பரிசோதனை அறிக்கை ஆகியவற்றையும் விவசாயி இணைத்து வழங்க வேண்டும்.

## தேங்காயின் மதிப்பைக் கூட்டினார்; விவசாயிகளின் லாபம் கூடியது!



விஜயகுமாரின் குடும்பம் விவசாயப் பின்னணி கொண்டது என்றாலும் அவர் படித்தது எம்.சி.ஏ., தற்போது பெங்களூரில் உள்ள மென் பொருள் நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வருகிறார். தன்னுடைய மென்பொருள் வேலையுடன் சேர்த்து, மதிப்புக் கூட்டிய தேங்காயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார். கை நிறைய சம்பளம் வாங்கும் சாப்ட்வேர் வேலையுடன் சேர்த்து, ஏற்றுமதியையும் செய்வதற்கு என்ன காரணம்? விஜயகுமாரிடம் பேசியதில்... என்னுடைய சொந்த ஊர் கோயம்புத்தூரை அடுத்த ஆனைக்கட்டி. அங்கு எங்களுக்கு சொந்தமாக மூன்று ஏக்கர் நிலம் உள்ளது. அதில் தென்னை மரங்கள்தான் வைத்திருக்கிறோம். தேங்காய் விளைவிக்க ஒவ்வொரு விவசாயியும் எவ்வளவு சிரமப்படுகிறார் என்பதை நேரில் பார்த்து வளர்ந்தவன் நான். எத்தனை கஷ்டப்பட்டாலும் ஒரு விவசாயிடம் இருந்து மிகக் குறைந்த விலைக்கே விலை பொருட்களை வாங்குகின்றனர். ஒரு தேங்காய் அதிகபட்சம் நான்கு ரூபாய் என்று வாங்கி, அதை 20, 25 ரூபாய்கு விற்கின்றனர். காரணம், எந்த விவசாயியும் நேரடியாக நுகர்வோருக்கு தங்கள் விளைபொருட்களைத் தருவதில்லை. இடைத்தரகர்கள் மூலம் பல கைகள் மாறியே வருகிறது. இந்த யதார்த்தமே பெங்களூரில் நான் வேலை செய்ய வந்தபோதுதான் எனக்கு முழுதாகப் புரிந்தது. விவசாயத்தை மட்டுமே நம்பி ஒரு குடும்பம் நடக்கும்போது படிப்பிற்கும் பிற செலவுகளுக்கும் எவ்வளவு போராட வேண்டியிருக்றிதுது, ஆனால் எந்த சிரமமும் இல்லாமல் அடிமாட்டு விலைக்கு விளை பொருட்களை வாங்கி பல மடங்கு லாபம் வைத்து விற்கின்றனர். விளைவிப்பவர்களுக்கு ஒன்றுமே கிடைப்பதில்லை; உழைப்பு மட்டுமே மிஞ்சுகிறது.

தென்னை வியாபாரிகளை எல்லாம் ஒருங்கிணைக்கலாம் என்ற எண்ணத்தில், கடந்த 2012ம் ஆண்டு, coconutindia.com என்ற இணையதளத்தை ஆரம்பித்தேன். உறுப்பினர்களாக சேருங்கள் என்று தகவல் சொல்லியும் முதல் ஆண்டில் பெரிதாக எந்த ஆதரவும் இல்லை. கோவை, பொள்ளாச்சியில் விளையும் தேங்காய்களை பொதுவாக இலங்கைக்கு அனுப்புவர். இதற்கான தேங்காய் வியாபாரிகள் சங்க கூட்டம் நடக்கும். இலங்கை உற்பத்தியாளர்கள் சங்கம் என்ற ஒன்று உள்ளது. அதன் தலைவர் சி.ஜி.சேகர், தேங்காய் உற்பத்தியாளர்கள் குறித்த விபரங்களைக் கொடுத்தார்.

தமிழ்நாடு முழுக்க, 1,500 தொடர்புகள் அவர் தந்தது. அவர்களை ஒருங்கிணைத்து இந்த கூட்டமைப்பை உருவாக்கினேன்.

தற்போது, உற்பத்தியாளர்கள், வினியோகஸ்தர்கள் என்று, 2,500 பேர் இருக்கின்றனர். விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேங்காயை இடைத்தரகர்கள் இல்லாமல் நாங்களே கொள்முதல் செய்கிறோம்.

தேங்காயை மதிப்புக் கூட்டி, தேங்காய் பால், பவுடர், தேங்காய் நார் கழிவிலிருந்து தேங்காய் நார் பித், காயர், போன்றவற்றை தயாரிக்கிறோம். தேங்காய் துருவல் பவுடரை ஐரோப்பிய நாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்திறோம். தேங்காய் பாலிலிருந்து எடுக்கப்படும் வெர்ஜின் தேங்காய் எண்ணெய் (தலைக்கும், குடிப்பதற்கும் பயன்படுத்தலாம். தினமும் 3 டீஸ்பூன் அளவு குடிப்பது நல்லது) இளநீர் போன்றவற்றை அப்படியே எடுத்து, பேக் செய்து எற்றுமதி செய்கிறோம். ஐரோப்பா தவிர மத்திய கிழக்கு நாடுகளுக்கும் அதிகமாக ஏற்றுமதி செய்கிறோம். தேங்காய் பவுடர் ஆறு மாதங்களுக்கு கெடாமல் இருக்கும். தேவைப்படுபவர்கள் இணையதளத்திலேயே ஆர்டர் செய்யலாம். ஒரு கிலோ பவுடர் 250 ரூபாய். ஒரு டன் தேங்காயிலிருந்து பால், பவுடர் எடுப்பதற்கான கருவிகள் வாங்க ஆறு லட்சம் ரூபாய் தேவைப்படும்.

கேரளாவில் உள்ள கொச்சியில் தேங்காய பவுடர் எடுப்பதற்கான பயிற்சி மையம் உள்ளது. அவர்களை அணுகினால் தேவையான பயிற்சியையும் வழிகாட்டுதல்களையும் தருவர்.

ஒரு ஏக்கரில் 75 மரம் வைத்திருப்பவர்கள் ஒரு சீசனில், 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை லாபம் பார்க்கலாம். ஆண்டிற்கு, 3 சீசன்கள் தேங்காய் காய்க்கும்.

## அரசே விதைக்கும்... அரசே அறுக்கும்!



கேரள அரசின் பண்ணை மீட்புத் திட்டத்தால் அங்கு காய்கறி உற்பத்தி அதிகரித்துள்ளதோடு, இயற்கை விவசாயமும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கேரளாவில் காய்கறி விளைச்சல் மிகவும் குறைவு. இந்தியாவில் காய்கறி உற்பத்தி செய்யும் முதல், 10 மாநிலங்களில்கூட கேரளா இல்லை. காய்கறி தேவைக்காக தமிழகம், கர்நாடகாவை நம்பித்தான் கேரளா உள்ளது. ஆனால், அண்மைகாலத்தில் கேரளா கொண்டு வந்துள்ள இயற்கை வேளாண் கொள்கை மற்றும் காய்கறி சாகுபடி ஊக்குவிப்பு திட்டங்களால் கேரளத்தின் காய்கறி உற்பத்தி கணிசமாக அதிகரித்து உள்ளது.

### குடும்ப ஸ்ரீ, ஜனஸ்ரீ

தமிழகத்திலிருந்து வரும் காய்கறிகளுக்கு தடை விதிக்க கேரளா அரசு முடிவு செய்திருப்பதற்கு அங்கு காய்கறி உற்பத்தி அதிகமானதும் ஒரு காரணம். இந்த ஆண்டு இறுதிக்குள் காய்கறி உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிட வேண்டும், ரசாயன பாதிப்பற்ற காய்கறிகளை மக்களுக்குத் தர வேண்டும் என்பதுதான் அம்மாநில அரசின் நோக்கம். இதற்காக மாநில வேளாண் துறை சார்பில், பண்ணை மீட்புத் திட்டம் 676 (Mission 676) துவங்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின்படி, வீட்டையொட்டி காலியாக உள்ள இடங்களிலும் மொட்டை மாடிகளிலும் அவரவர் தங்கள் தேவைக்கு ஏற்ப காய்கறி தோட்டங்களை அமைக்க அரசு ஊக்குவித்து வருகிறது. இதுகுறித்த விழிப்புணர்வை மக்களிடையே

ஏற்படுக்த குடும்ப ஸ்ரீ, ஜனஸ்ரீ போன்ற சுய உதவிக் குழுக்களை நியமித்து உள்ளது. குடும்பஸ்ரீ அமைப்பின் தலைவராக பிரபல நடிகை மஞ்சு வாரியர் உள்ளார். இவர் தலைமையிலான குழுக்கள் வீடு வீடாகச் சென்று குறைந்த விலையில் காய்கறி விதைகளை கொடுத்து தோட்டம் அமைப்பதற்கான வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்குகின்றனர்.

மாதந்தோறும் ஒரு சிறிய தொகையை கட்டணமாகச் செலுத்தினால், இவர்கள் நேரடியாக வீட்டிற்கே வந்து விதைகளை நடுவது முதல் தோட்டம் அமைப்பதற்கான அனைத்து வேலைகளையும் செய்து தருகின்றனர். வீட்டு தேவைக்கு மேல் கூடுதலாக விளையும் காய்கறிகளை கூட்டுறவு மையம் மூலம் விற்பனை செய்யவும் இவர்களே ஏற்பாடு செய்து தருகின்றனர். தற்போது கேரளா முழுவதும் பல லட்சம் பேர் தங்களது வீட்டுத் தோட்டங்களை மாடியிலிலும் காலி இடங்களிலும் அமைத்து உள்ளனர். சிலர் மொட்டை மாடிகளில் வாழை, கொய்யா, எலுமிச்சை போன்ற சிறு மரங்களைகூட வளர்க்கின்றனர். இந்த ஆண்டு ஓணம் பண்டிகையின்போது, பலர் தங்கள சொந்த வீட்டில் விளைந்த காய்கறிகளையே பயன்படுத்தினர்.

வீடு, மாடித் தோட்டம் தவிர, விளை நிலங்களிலும் காய்கறி சாகுபடியை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கேரளா தட்பவெப்ப நிலைக்கு உகந்த காய்கறி விதை ரகங்கள் உருவாக்கப்பட்டு அவற்றை மானிய விலையில் விவசாயிகளிடம் வினியோகம் செய்கின்றனர். அத்துடன் காய்கறி பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கான மானியமும் அதிகரிக்கப்பட்டு உள்ளது. உரம், களை மேலாண்மை, நோய், பூச்சி கட்டுப்பாடு என்று அனைத்திற்கும் இயற்கை உரங்களை மட்டுமே கேரள அரசு சிபாரிசு செய்கிறது. பாதிப்பின் அளவு கட்டுப்படுத்த முடியாமல் இருந்தால் மட்டுமே ரசாயன உரங்களை சிபாரிசு செய்கின்றனர். மாநிலம் முழுவதும் 10க்கும் அதிகமான பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டு அங்கு முழுக்கவே இயற்கை விவசாயம் செய்யப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள், 2,500 டன் காய்கறி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்துள்ளனர்.

## முதல் மாநிலம்

மற்ற மாநிலங்களில் இருந்து கேரளாவிற்கு செல்லும் கய்கறிகளில் தடை செய்யப்பட்ட பூச்சிக் கொல்லி கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்பட்டு உள்ளதா

என்பதை அறிய நடமாடும் ஆய்வகம் ஒன்று இந்தயாவிலேயே முதன்முறையாக கேரளாவில் நடைமுறையில் உள்ளது.

இந்த ஆய்வகத்தின் மூலம் ஆய்வு செய்து குறிப்பிட்ட காய்கறி, பழங்களில் தடை செய்யப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்து இருந்தால், அம்மாநில உணவு பாதுகாப்புத் துறைக்கு தகவல் தெரிவித்துவிட்டு காய்கறிகளை திருப்பி அனுப்பிவிடுகின்றனர். தர நிர்ணய சான்றிதழ் பெற்ற வாகனங்களை மட்டுமே மாநில எல்லைக்குள் அனுமதிக்கின்றனர்.

**தர்பூசணி**



தர்பூசணிப் பழங்களில் உள்ளே இருக்கும் சிவப்பு நிறத்தை அதிகப்படுத்துவதற்காக, சிவப்பு வண்ணத்தை ஊசி மூலம் சில வியாபாரிகள் செலுத்துகின்றனர் என்ற புகார்கள் உள்ளன. ஏதோ ஒரு வேதிப் பொருளை உள்ளே செலுத்துகின்றனர் என்பதால் மக்கள் அதை தவிர்க்க நினைப்பது இயல்பு. ஆனால் பொதுவாக வெளிப்புறத்திலிருந்து சாயங்களை பழங்களுக்குள் செலுத்துவது கடினம். திடக் கரைசல்களை, சிறப்பு திசுக்கள் மூலமாகவே தாவரங்கள் பல பாகங்களுக்கும் இயற்கையில் செலுத்துகின்றன. அறுவடை செய்த பழங்களில் வெளியிலிருந்து செயற்கை முறையில் திரவங்களை ஊசி மூலம் செலுத்துவது என்பது சாத்தியம் இல்லை.

**வாழை**



மஞ்சள் நிறமுடைய சீராக பழுக்க வைக்கப்பட்ட வாழைப் பழங்களை மரபணு மாற்றம் செய்யப்பட்ட வாழைப் பழங்கள என்று சிலர் தவறாக புரிந்து கொள்கின்றனர். குளிரூட்டப்பட்ட பதன அளையில் விஞ்ஞான முறையில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பமான எத்திலின் வாயுவை சரியான அளவில் சரியான ஈரப்பதத்தில் செலுத்தியே பழங்கள் பழுக்க வைக்கப்படுகின்றன. இவைதான் நல்ல தரமான மஞ்சள் நிறமுடைய பழங்களாக சந்தைக்கு விற்பனைக்கு வருகின்றன. இது அமெரிக்கா, ஐரோப்பா உட்பட பல நாடுகளும் ஏற்றுக் கொண்ட உடலுக்கு தீங்கு விளைவிக்காத முறை. மேலும் மரபணு முறையில் உருவாக்கப்பட்ட வாழை ரகங்கள் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் பயிர் செய்யப்படுவது இல்லை.

தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

## மேட்டூரில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு அதிகரிப்பு: வேகமாக குறைகிறது நீர் மட்டம்



மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அணைக்கு விநாடிக்கு 4,253 கனஅடி நீர் வந்துகொண்டு இருக்கிறது. அணையில் இருந்து சம்பா பருவ சாகுபடிக்காக விநாடிக்கு 12,000 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. நீர் திறப்பை அதிகரிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று நீர் திறப்பு 12,000 கனஅடியில் இருந்து 18,000 கனஅடியாக உயர்த்தப்பட்டது. இன்று 18,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணை நீர்மட்டம் 67.38 அடியாகவும், நீர் இருப்பு 30.49 டிஎம்சியாகவும் உள்ளது.

நீர் மட்டம் வேகமாக குறைந்து வருவதால் சம்பா சாகுபடி முழுமைக்கும் தண்ணீர் கிடைக்குமா என்று கேள்வி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

### மாவட்டம் முழுவதும் கொட்டி தீர்த்த மழை

சேலம், : சேலம் மாநகரில் நேற்று பகல் முழுவதும் வெயில் வாட்டி வதைத்த நிலையில், இரவு மழை கொட்டி தீர்த்ததால் வெயிலின் தாக்கம் தணிந்து குளிர்ச்சியான சீதோஷ்ணம் நிலவியது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

சேலம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. கோடைகாலம் போல வெயில் கொளுத்துவதால், பகல் நேரங்களில் சாலைகளில் நடமாட்டம் குறைவாக உள்ளது. இரவு நேரங்களிலும் புழுக்கம் நிலவியதால், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் தூங்க முடியாமல் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு திடீரென மழை பெய்தது. பின்னர் காலையில் வழக்கம் போல வெயில் கொளுத்தியது. இந்நிலையில், நேற்றிரவு இரவு 8 மணியளவில் லேசான மழை பெய்தது. அதன் பின்னர் இடைவெளி இல்லாமல் 2மணி நேரம் மழை கொட்டி தீர்த்தது. மழையால் நகரின் தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்தது. கருவாட்டு பாலம், சித்தேஸ்வரா காலனி, கிச்சிப்பாளையம், புதிய பஸ் ஸ்டாண்ட், பழைய பஸ் ஸ்டாண்ட் உள்ளிட்ட இடங்களில் மழைநீர் சாலையில் பெருக்கெடுத்து ஓடியது. மேலும், பாதாள சாக்கடை, தனிக்குடி திட்டத்துக்காக தோண்டப்பட்ட குழிகள் சரிவர மூடப்படாததால், குழிகளில் மழைநீர் தேங்கி சேறும், சகதியுமாக மாறின. 3 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த மழையால் பகல் முழுவதும் இருந்த வெப்பத்தின் தாக்கம் தணிந்து குளிர்ச்சியான சீதோஷ்ணம் நிலவியது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.ஆத்தூர்: ஆத்தூரில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஒருமணிக்கு ஆத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மழை பெய்தது. அதிகாலை 3 மணி வரை வெளுத்து வாங்கியது. சுமார் 4 மணி நேரத்திற்கும் மேலாக பெய்த மழையால் கிணறுகளில் நீர்மட்டம் சற்று உயர்ந்தது.

## விலை உயர்வால் மரவள்ளி விவசாயிகள் மகிழ்ச்சி

ஈரோடு, : தமிழகத்தில் ஈரோடு, சேலம், நாமக்கல், திருப்பூர், கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மரவள்ளி கிழங்கு பயிரிடப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் பவானி, அம்மாபேட்டை, அந்தியூர், கோபி, சத்தி, தாளவாடி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் மரவள்ளி கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது. அறுவடை செய்யப்படும் மரவள்ளி கிழங்கை ஜவ்வரிசி ஆலைகள் நேரடியாக கொள்முதல் செய்து வருகின்றன. கடந்த 6 மாதங்களுக்கு முன்பு ஒரு டன் மரவள்ளி கிழங்கு ரூ.5 ஆயிரத்திற்கு விற்பனையாகி வந்த நிலையில் தற்போது டன் ஒன்றுக்கு ரூ.8 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை விற்பனையாவதால் மரவள்ளி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு செயலாளர் நல்லசாமி கூறுகையில், கடந்த ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் மரவள்ளிக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. டன் ஒன்று ரூ.10 ஆயிரம் என்ற நிலையில் ஆலைகள் கொள்முதல் செய்து வருகின்றன. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது தற்போது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகிற விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஆனால் அதே வேளையில் பஞ்சு அசுவினி பூச்சி தாக்குதல் காரணமாக மகசூல் சற்று குறைந்துள்ளது. இதை கட்டுப்படுத்த வேளாண் விஞ்ஞானிகள் உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

## கோவையில் கொட்டியது மழை பொதுமக்கள் மகிழ்ச்சி

கோவை, : கோவை மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்கு பருவமழை சராசரியாக 693 மி.மீ பெய்வது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை கைவிட்டு விட்டது. வெறும் 215 மி.மீ மழை மட்டுமே பெய்துள்ளது. போதிய மழை பெய்யாததால், ஒரு லட்சம் ஹெக்டேர் அளவில் பயிரிடப்பட்ட விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். பருவமழை பெய்ய வேண்டிய காலக்கட்டத்தில் வெயில் சுட்டெரித்தது. இதனால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அவதியடைந்தனர். வனத்தில் வறட்சி நிலவியது. யானை உள்ளிட்ட வனவிலங்குகள் இரைதேடி வனகிராமங்களுக்குள் ஊடுருவியது.

இந்நிலையில், கோவை மாவட்டத்தில் ேநற்று பரவலாக மழை பெய்தது. காலை 11.30 மணி முதல் காலநிலை மாறியது. வெப்பம் தணிந்து, மழை மேகம் சூழ்ந்தது. மதியம் 12 மணி முதல் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் லேசாக மழை பெய்தது. கோவை மாநகர், பெரியநாயக்கன்பாளையம், காரமடை, அன்னூர், மேட்டுப்பாளையம், சூலூர், தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு, நெகமம், பொள்ளாச்சி, வால்பாறை உள்ளிட்ட பகுதிகளில் நல்ல மழை பெய்தது.

கோவை மாநகரில், மதியம் சாரல் மழை பெய்தது. வெயிலில் தவித்த கோவை மக்கள், மழை பெய்ததும் மகிழ்ச்சி அடைந்தனர். சிலர், மழையில் நனைந்தபடியே இருசக்கர வாகனங்களை ஓட்டிச்சென்று குதூகலித்தனர். மாநகரில் இரவு முழுவதும் முழுமையாக மழை கொட்டித்தீர்த்தது. விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கோவையில் இன்றும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.இதுபற்றி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக காலநிலை ஆராய்ச்சியாளர் பன்னீர்செல்வம் கூறுகையில், “வெப்ப சலனத்தால் கோவையில் மழை ெபய்தது. இது வடகிழக்கு பருவமழை அல்ல. வடகிழக்கு பருவமழை அக்டோபர் 20ம் தேதிக்கு பிறகுதான் பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது” என்றார். மின்தடை : மாநகரில் மழை காரணமாக இரவு 7.30 மணி முதல் மின்தடை ஏற்பட்டது. பொதுமக்கள் அவதி அடைந்தனர்.

**போடி பகுதியில் குறுகிய கால பயிரான கத்தரி நடவு பணி தீவிரம்**

போடி, : போடி பகுதியில் குறுகிய கால பயிரான கத்தரி நடவு செய்யும் பணி கிணற்றுப்பாசனம் மூலம் தீவிரமாக நடந்து வருகிறது.போடி நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள விவசாயிகள் கிணற்றுப்பாசனத்தில் அவ்வப்போது தொடர் விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். சில குறிப்பிட்ட காய்கறிகள் பயிரிட்டு கஷ்டப்பட்டு வளர்த்து அறுவடை செய்கின்றனர்.

இந்நிலையில் குறுகிய கால பயிரான ‘ஹைபிரிட்’ வகை கத்தரிக்காய் விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். முன்னதாக நிலத்தினை பண்படுத்தி கிணற்று நீரை பொறுப்புடன் பாய்ச்சி நடவு செய்திட தயார்படுத்தினர். அதன்படி கத்தரி நாற்றினை பெண் தொழிலாளர்கள் நடவு செய்து வருகின்றனர். பல பகுதிகளில் இந்த கத்தரி நடவு வேகமாக நடந்து வருகிறது. இடையில் உரம் மருந்து என இட்டு

வளர்ப்பதற்கான பணியில் முழுமூச்சாக ஈடுபட்டுள் ளனர். சரியாக 70வது நாளில் அறுவடை செய்து தேனி ஏலச்சந்தைக்கு கொண்டு செல்வார்கள்.

**மாவட்டத்தில் மாற்று விவசாயம் நீராதாரத்திற்கு ஏற்ப மரவள்ளி சாகுபடி**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்ட நீராதாரத்திற்கு ஏற்ற வகையில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடுவதில் விவசாயிகள் சோதனை முயற்சியில் இறங்கியுள்ளனர்.சிவகங்கை மாவட்டத்தில் மாற்று விவசாயமாக மரவள்ளியை விவசாயிகள் பயிர் செய்யத் தொடங்கியுள்ளனர். மரவள்ளியில் குங்குமரோஸ், முள்ளிவாடி, வெள்ளைக்கிழங்கு என்ற மூன்று வகை உள்ளன. 46 வகையான ஸ்டார்ச், ஜவ்வரிசி, பசை, ஆல்கஹால், சிப்ஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான உணவுப்பொருட்கள் மரவள்ளியில் தயார் செய்யப்படுகின்றன. இதனால் மரவள்ளிக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள், வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. சுமார் அரை அடி நீளமுள்ள மரவள்ளிச் செடி குச்சியை, ஒரு இன்ச் ஆழத்தில் நிலத்தில் நடப்படுகிறது. இவ்வாறு ஓர் ஏக்கருக்கு 5 ஆயிரம் குச்சி நடலாம். இந்தச் செடி வளரும் காலத்தில் இதே நிலத்தில் ஊடு பயிராக கடலை, வெங்காயம், உளுந்து உள்ளிட்ட மூன்று மாதப் பயிர்களைச் சாகுபடி செய்யலாம்.இதனால் இவைகளுக்கு பாய்ச்சப்படும் நீரிலேயே மரவள்ளிச் செடியும் வளரும். தொடர்ந்து மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு நீர் போதுமானது. அதிகமான நீர் பாய்ச்சத் தேவையில்லை. எட்டு முதல் பத்து மாதத்திற்குள் மரவள்ளிக் கிழங்கு பறிக்கலாம்.

சுமார் ஏழு அடி முதல் 10 அடி வரை வளர்ந்துள்ள ஒரு செடியை, வேருடன் பறித்தால் குறைந்தபட்சம் 4 கிலோ முதல் 6 கிலோ வரை கிழங்கு கிடைக்கிறது. கிழங்கு ஒரு அடி ஆழத்திற்குள்ளேயே கிடைக்கும். பறிக்கப்படும் செடியின் குச்சிகள் மீண்டும் பயிரிடப் பயன்படுகிறது.இது குறித்து மந்திக்கண்மாய் விவசாயி அருள்தாமஸ் கூறியதாவது:சேலம், நாமக்கல் உள்ளிட்ட மழை குறைவான மாவட்டங்களில் நீர் பற்றாக்குறையால் மானாவரிப் பயிராக மரவள்ளி பயிரிடப்படுகிறது. இதனால் அந்த மாவட்டங்களில் மரவள்ளியைக்கொண்டு பல்வேறு உற்பத்திகள் செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. சிவகங்கை மாவட்டத்தில் தற்போது மழை அளவு குறைந்து வருகிறது. இதனால் அதிக நீர்த் தேவையுள்ள பயிர்களான நெல், கரும்பு உள்ளிட்டவைகளைப் பயிரிட்டு விவசாயிகள் கடும் பாதிப்பைச் சந்திக்க வேண்டிய நிலை உள்ளது.

இதற்கு மாற்றாக மரவள்ளி பயிரிடலாம். மரவள்ளிக்கு ஒரு ஏக்கருக்கு நீர், உரம், பராமரிப்பு உள்ளிட்டவைக்கு அதிகபட்சம் ரூ.10 ஆயிரம் முதல் ரூ.12 ஆயிரம் வரை மட்டுமே செலவாகிறது. ஊடுபயிரில் கிடைக்கும் லாபத்திலேயே மரவள்ளிப் பயிருக்கான செலவை ஈடு செய்யலாம். இதனால் மரவள்ளி மூலம் கிடைக்கும் பணம் அனைத்துமே லாபம்தான். தற்போது ஒரு கிலோ கிழங்கு வெளி மார்க்கெட்டில் ரூ.12 வரையும், தொழிற்சாலைகளுக்கு ரூ.7 வரையும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டை ஒப்பிடும்போது சுமார் 40 சதவீதம் விலை அதிகரித்துள்ளது. ஒரு ஏக்கரில் 15 முதல் 20 டன் கிழங்கு கிடைக்கிறது. நான் பரிசோதனை முயற்சியாகச் செய்ததைப் பார்த்த பல விவசாயிகள், தற்போது மரவள்ளி பயிரிட தொடங்கியுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## சந்தைக்கு வரத்துக் குறைவால் ஆடுகள் விலை கடும் உயர்வு

மானாமதுரை, : தமிழகத்தில் கிராம மக்களின் வாழ்வில் கால்நடை வளர்ப்பு என்பது ஓர் முக்கிய அங்கமாகி விட்டது. எந்த ஓர் எதிர்பார்ப்பும் இல்லாமல் நேசம் சார்ந்த முறையில் பழக்கப்பட்ட கால்நடை வளர்ப்பானது பல ஆண்டுகாலமாக அவர்களின் பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. தமிழகத்தில் 81.77 லட்சம் வெள்ளாடுகளும், 55.93 லட்சம் செம்மறியாடுகளும் உள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றில் தலைச்சேரி, போயர், சுரோகி போன்ற அதிக எடையுள்ள இறைச்சிக்கான கலப்பின வெள்ளாடுகள் வளர்ப்பு பிரபலமாகி வருகின்றன.கிராமப்புறங்களைப் பொருத்தவரை தென்மாவட்டங்களில் கொடியாடு, பல்லையாடு, ஜமுனாபாரி, சீனி ஆடு உள்ளிட்ட நாட்டு ரகங்கள் தான் பொதுமக்களின் இறைச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது.

கிராமப்புற ஏழைகளுக்கு ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ஆடுகள் வளர்க்க அரசு ஊக்குவித்தாலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலவும் வறட்சியால் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு தீவனப்பற்றாக்குறை ஏற்பட்டு இனவிருத்தியும் குறைந்து வருகிறது. இந்நிலையில், தீபாவளிக்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ளதால் சந்தையில் வெள்ளாடுகள் வரத்துக் குறைந்துள்ளது.

மானாமதுரை, இளையான்குடி, சிவகங்கை, பார்த்திபனூர், திருப்புவனம் உள்ளிட்ட பகுதிகளில் நடக்கும் வாரச்சந்தைகளில் முன்பு ஆயிரக்கணக்கில்

ஆடுகள் விற்பனை நடந்து வந்தன. வரும் 29ம் தேதி தீபாவளி பண்டிகை வருவதால் பண்டிகையை ஒட்டி, வரும் நாட்களில் ஆடுகளை விற்றால் நல்ல லாபம் கிடைக்கும் என்று ஆடு வளர்ப்போர் கடந்த இரண்டு வாரங்களாகச் சந்தைக்கு ஆடுகளை ஓட்டிவரவில்லை. இதனால் வழக்கமாக இறைச்சிக் கடைகளுக்கு இறைச்சிக்கான ஆடுகள் கிடைப்பது கடினமாக உள்ளது. வெள்ளாடுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் சந்தையில் விலை அதிகரித்து வருகிறது. இது குறித்து ஆடு வளர்க்கும் ராமு, கண்ணன் ஆகியோர் கூறுகையில், "நான்கு ஆண்டுகளுக்கு முன் பத்து கிலோ எடையுள்ள வெள்ளாடு ரூ.4 ஆயிரம் முதல் 4 ஆயிரத்து 500 வரை இருந்தது. தற்போது அதே எடையுள்ள ஆடு ரூ.6 ஆயிரத்து 500 முதல் 7 ஆயிரம் வரை விற்கிறது. தீபாவளியன்று பெரும்பாலான வீடுகளில் ஆட்டிறைச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் கறிக்கடைக்காரர்கள், ஆட்டு வியாபாரிகள் சந்தைக்கு வரும் ஆடுகளை வாங்கி இரண்டு வாரங்கள் வைத்திருந்து தீபாவளியன்று அறுத்து கறியாக விற்பனை செய்வர். இந்த மாதம் 29ம் தேதி தீபாவளி பண்டிகை என்பதால் தீபாவளிக்கு முந்தைய வாரச்சந்தையான 20ம் தேதியும், 27ம் தேதி நடக்கும் வார சந்தையில் ஆடுகளை விற்றால் நல்ல லாபம் கிடைக்கும் என்று பெரும்பாலான ஆடு வளர்ப்போர் இந்த வாரச்சந்தைக்கு ஆடுகளைக் கொண்டு வரவில்லை. இதனால் ஆடுகள் வரத்தும் விற்பனையும் குறைந்துள்ளது. மேலும் இறைச்சிகடைகளில் தனிக்கறி கிலோ ரூ.400 என்ற நிலையில் இருந்து 460 ஆக உயர்ந்துள்ளது. ஆட்டின் விலை உயர்ந்து வருவதால் இறைச்சி விலையை மீண்டும் உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது" என்றனர்.